Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 224 /2018**

**வழக்கு சாட்சி எண். PW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வீரபத்திரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | ருத்தரப்பன் | தொழில் | : | |
| கிராமம் | : | காவேரிப்பட்டிணம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | காவேரிப்பட்டிணம் | வயது | : | 65 |

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 5 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11th** Day of **May 2023.**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு வனத்துறையில் வனச்சரக அலுவலராக பணி ஓய்வு பெற்று தற்போது காவேரிப்பட்டிணத்தில் வசித்து வருகிறேன். கடந்த 07.04.2015 ம் தேதி தீர்த்மலை வனச்சரகத்தில் வனசரக அலுவலராக பணிபுரிந்து கோட்டப்பட்டி வனசரக கூடுதல் பொறுப்பு வகித்தபோது மாவட்ட வன அலுவலரின் வாய்மொழி உத்தரவின் பேரில் மொரப்பூர் வனச்சரகத்திற்கு குழுவினருடன் ஆஜரானேன். மொரப்பூர் வனச்சரக அலுவலர் ரோந்துபணிக்கு அரூர் – மொரப்பூர் சாலையில் உள்ள சந்தனமரத்தோட்டத்திற்கு ரோந்துபணிக்கு சென்றோம். இரவு 1 மணியளவில் நாங்கள் ரோந்து பணி மேற்கொண்டோம். சுமார் 3

மணியளவில் ஒரு கார் மொரப்பூரில் இருந்து அரூர் நோக்கி வந்துகொண்டிருந்தபோது அதனை நிறுத்தி சோதனை செய்தபோது 5 நபர்கள் இருந்தார்கள். காரின் டிக்கியை திறந்து பார்த்போது அதில் சிவப்பு சந்தனமரக்கட்டைகள் இருந்தன. பின்னர் அவர்களை சுற்றிவளைத்து அரூர் சிவப்பு சந்தனமரதோட்டத்தில் இருந்த வனத்துறையால் பாதுகாப்பிற்காக போடப்பட்ட செட்டிற்கு அழைத்து சென்றோம். கைப்பற்றப்பட்ட சிவப்பு சந்தனமரக்கட்டைகளை எண்ணியபோது மொத்தம் 15 மரத்துண்டுகள் இருந்தன. பின்பு டார்ச் லைட் வெளிச்சத்தில் கைப்பற்றப்பட்ட சிவப்பு சந்தனமரக் கட்டைகளுக்கு எண்கள் இடப்பட்டன. அங்கு வைக்கப்பட்டிருந்த தராசின் மூலமாக வனவர் பெரியண்ணன் அவர்களால் கைப்பற்றப்பட்ட சிவப்பு சந்தனமரக்கட்டைகள் எடைப்பட்டியியல் என் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது. பின்பு மரத்துண்டுகளின் நீளம் மற்றும் சுற்றளவு எடுத்து மகசர் தயார் செய்தோம். பின்பு அங்கிருந்த வனவர்கள் பிடிபட்ட எதிரிகளிடம் இருந்து தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள். பின்பு பிடிபொருட்களையும் குற்றவாளிகளையும் மொரப்பூர் வனச்சரக அலுவலகம் கொண்டுவந்து மொரப்பூர் வனச்சரக அலுவலர் அவர்களால் குற்ற அறிக்கை தயார் செய்யப்பட்டு எதிரிகளையும் பிடிபொருட்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தோம்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு பணி தீர்த்தமலை வனச்சரகம். கோட்டப்பட்டி வனச்சரகத்திற்கு கூடுதல் பொறுப்பு வகித்தேன். எனக்கு அரூர் மாவட்ட வன அலுவலர் வாய்மொழி உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றும், நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாய்மொழி உத்தரவு 07.04.2015ம் தேதி மாலை 6 மணிக்கு வழங்கப்பட்டது. மொரப்பூர் வனச்சரகத்தில் ஆட்கள் குறைவாக

இருந்ததால் இரவு ரோந்துபணிக்கு ஆட்களை அழைத்துக்கொண்டு வருமாறு வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த வாய்மொழி உத்தரவு அன்று ஒருநாள் மட்டும் பணி செய்ய பிறப்பிக்கப்பட்டது. வேறு ஒரு சந்தனமர தோட்டத்திற்கு பாதுகாப்பு பணிக்காக அவர்கள் சென்றுவிட்டார்கள். தீர்த்தமலை வனச்சரகம் மற்றும் கோட்டப்பட்டி வனச்சரகத்தில் இருந்து மொத்தம் 8 நபர்கள் சென்றோம். கோட்டப்பட்டி வனச்சரக அலுவலகத்திலிருந்து 4 நபர்களும் தீர்த்மலை வனச்சரக அலுவலகத்தில் இருந்து 4 நபர்களும் ஜீப்பில் சென்றோம். மொரப்பூர் வனச்சரக அலுவலகத்தில் இரவு 12 மணிக்கு வந்து சேர்ந்தோம். மொத்தம் 16 நபர்கள் ரோந்துபணிக்கு சென்றோம். ரோந்துபணி சுமார் 1 மணிக்கு அரூர் மொரப்பூர் சாலையில் உள்ள சந்தனமரத்தோட்டத்திற்கு அருகே தொடங்கினோம். சாலையில் அங்கேயே நின்று வாகன தணிக்கை செய்துகொண்டிருந்தோம். சுமார் 15 வாகனங்களை தணிக்கை செய்திருப்போம். இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்களை தணிக்கை செய்தோம். சிவப்பு சந்தனமரத்தோட்டத்தை நான்கு பகுதிகளையும் பாதுகாக்கவேண்டும் என்றால் சரிதான். அதற்கு தனியாக ஆட்கள் உள்ளார்கள். அவர்கள் குறைவாக உள்ளதால் சந்தனமரத்தோட்ட பாதுகாப்பிற்காக நாங்கள் அன்று ரோந்து சென்றோம். நாங்கள் வாகன தணிக்கை செய்த இடத்தில் தினமும் வாகன தணிக்கை நடைபெறுமா என்றால் அது பற்றி மொரப்பூர் வனச்சரக அலுவலருக்குதான் தெரியும். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி மொரப்பூர் வனச்சரக அலுவலர் என்றால் சரிதான். தணிக்கையின்போது வந்த காரை நாங்கள் டார்ச் லைட் வெளிச்சம் காட்டியவுடன் நிறுத்திவிட்டார்கள். யாரும் ஓட முயற்சிக்கவில்லை என்றால் சரிதான். அந்த காரின் ஓட்டுனர் யார் என்று எனக்கு நினைவில்லை. கைப்பற்றப்பட்ட கட்டைகள் அனைத்து மரத்தில் இருந்து வெட்டப்பட்ட கட்டைகளா என்றால் இல்லை. மரத்தில் இருந்து

முதிர்ச்சி காரணமாக விழுந்து கட்டைகள் ஆகும். தானே முறிந்து விழுந்த கட்டைகள் ஒழுங்கற்ற நிலையில் இருக்கும் என்றால் சரிதான். கட்டைகள் வெட்டப்பட்டிருந்ததா என்று நியாபகம் இல்லை. தானே முறிந்து விழுந்த கட்டைகளை கார் டிக்கியில் வைப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சிவப்பு சந்தனமரத்துண்டுகளை நீதிமன்றத்தில் வனச்சரக அலுவலர் ஒப்படைத்தாரா என்று எனக்கு தெரியவில்லை. வாகன தணிக்கை செய்த சாலைக்கும் சிவப்பு சந்தனமர தோட்டத்தில் இருந்த செட்டிற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 125 அடி இருக்கும். சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் இருக்கலாம். எதிரிகளை பிடித்தவுடன் சாலையில் இருந்து சுமார் 10 நிமிடத்தில் செட்டிற்கு சென்றுவிட்டோம். செட்டில் சுமார் 1 மணி நேரம் இருந்திருப்போம். செட்டில் உள்ள வில் தராசில் வைத்து எடைப்போட்டோம். வில் தராசு அங்கேயே இருந்தது. வில்தராசில் எடைகற்கள் தேவையில்லை. பிடிபட்ட சிவப்பு சந்தமரத்துண்டுகளை வனவர் பெரியண்ணன் எடைப்போட்டு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். அந்த செட்டில் லைட் வசதி இல்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் இருந்து டார்ச் லைட்டோ அல்லது ஆயுதங்களோ கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. கிளைகள் என்பது வேறு கட்டைகள் என்பது வேறு என்றால் சரிதான். பொதுவாக காப்புக்காட்டில் பட்டியல்மரங்களை தவிர வேறு மரங்களின் குச்சிகளை எடுத்துவரும் நபர்கள் மீது வனச்சரக அலுவலர் மாவட்ட வன அலுவலரின் பரிந்துரையின் பேரில் அபராதம் விதிப்பது வழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட சிவப்பு சந்தனமரக்கட்டைகளை எங்கிருந்து எடுத்துவரப்பட்டது என்று சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடம் குறித்து மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளார்களா என்று எனக்கு தெரியவில்லை. கைப்பற்றப்பட்ட கட்டைகளுக்கு வனவர் பெரியண்ணன்

எண் வழங்கினார். கைப்பற்றப்பட்ட கட்டைகளை பிடிபட்ட காரில் வைத்து ஓட்டுனர் ராஜேந்திரன் மூலம் வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டுவரப்பட்டது. சம்பவயிடத்தில் இருந்து நானும் மொரப்பூர் வனச்சரக அலுவலகத்திற்கு வந்தேன். கைப்பற்றப்பட்ட சிவப்பு சந்தனமரக்கட்டைகளை புகைபடம் எடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியவில்லை. நீதிமன்றத்தில் எதிரிகளை ஆஜர்படுத்தும் வரையில் நான் உடன் இருந்தேன். இந்த வழக்கு நடவடிக்கைகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட சிவப்பு சந்தனமரக்கட்டைகளையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்கள் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் அதற்கு எண் வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் சிவப்பு சந்தனமரக்கட்டைகளை கடத்தவில்லை என்றும், அவைகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக மொரப்பூர் வனச்சரக அலுவலர் என்னை எதுவும் விசாரணை செய்யவில்லை. பிடிபட்ட கட்டைகள் சிவப்பு சந்தனமரக்கட்டைகள்தானா என ஆய்வுக்கு உட்படுத்தினாரா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 224 /2018**

**வழக்கு சாட்சி எண். PW3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | துரைசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | திருச்சி | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருச்சி | வயது | : | 42 |

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 5 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11th** Day of **May 2023.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி மாவட்டம் வனவியல் விரிவாக்க சரக வனசரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.04.2015 ம் தேதி கோட்டப்பட்டி வனச்சரகத்தில் பயிற்சி வனசரக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். மாவட்ட வன அலுவலரின் வாய்மொழி உத்தரவின்படி மொரப்பூர் வனச்சரக அலுவலகத்தில் வாகன தணிக்கை மற்றும் காப்புக்காடு தணிக்கை 16 நபர்கள் மேற்கொண்டிருந்தோம். இரவு 1 மணியளவில் நாங்கள் ரோந்து பணி மேற்கொண்டோம். சுமார் 2.45 மணியளவில் ஒரு டாடா இண்டிகா கார் மொரப்பூரில் இருந்து அரூர் நோக்கி வந்துகொண்டிருந்தது . மேற்படி காரில் ஒரு பக்கம் மட்டும் முகப்பு

விளக்கு எறிந்த காரணத்தினால் சந்தேகப்பட்டு அதனை நிறுத்தி சோதனை செய்தபோது 5 நபர்கள் இருந்தார்கள். காரின் டிக்கியை திறந்து பார்த்போது அதில் சிவப்பு சந்தனமரக்கட்டைகள் இருந்தன. பின்னர் அவர்களை சுற்றிவளைத்து அரூர் சிவப்பு சந்தனமரதோட்டத்தில் இருந்த வனத்துறையால் பாதுகாப்பிற்காக போடப்பட்ட செட்டிற்கு அழைத்து சென்றோம். கைப்பற்றப்பட்ட சிவப்பு சந்தனமரக்கட்டைகளை எண்ணியபோது மொத்தம் 15 மரத்துண்டுகள் இருந்தன. பின்பு டார்ச் லைட் வெளிச்சத்தில் கைப்பற்றப்பட்ட சிவப்பு சந்தனமரக் கட்டைகளுக்கு எண்கள் இடப்பட்டன. அங்கு வைக்கப்பட்டிருந்த தராசின் மூலமாக வனவர் பெரியண்ணன் அவர்களால் கைப்பற்றப்பட்ட சிவப்பு சந்தனமரக்கட்டைகள் எடைப்பட்டியியல் தயார் செய்யப்பட்டது. பின்பு பிடிபொருட்களையும் குற்றவாளிகளையும் மொரப்பூர் வனச்சரக அலுவலகம் கொண்டுவந்து மொரப்பூர் வனச்சரக அலுவலர் அவர்களால் குற்ற அறிக்கை தயார் செய்யப்பட்டு எதிரிகளையும் பிடிபொருட்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தோம்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் ரோந்து செல்லவேண்டும் என்று கோட்டப்பட்டி வனச்சரக அலுவலர் மாலை 6 மணிக்கு தகவல் சொன்னார். எந்த இடத்திற்கு ரோந்து செல்லவேண்டும் என்று சொல்லவில்லை. இரவு 8 மணிக்குமேல் ரோந்து பணிக்கு செல்லவேண்டும் என்று சொன்னார். இரவு 8 அல்லது 8.30 மணியவில் கோட்டப்பட்டியில் இருந்து 6 நபர்கள் கிளம்பினோம். வரும் வழியில் காப்புக்காடுகளை பார்த்தோம். எந்த இடம் என்று நியாபகம் இல்லை. கோட்டப்பட்டியில் இருந்து அரூர் சுமார் 35 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். கோட்டப்பட்டி வனச்சரகத்தில் செம்மரக்கட்டைகள் உள்ளதா என்று எனக்கு நினைவில்லை. மரங்களை அடையாளப்படுத்த பயிற்ச்சி வகுப்புகள் உள்ளது. செம்மரக்கட்டைகள் சிவப்பு நிறத்தில் இருக்கும்.

செம்மரக்கட்டைகளும் சிவப்பு சந்தனமரக்கட்டைகளும் ஒன்றுதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட செம்மரக்கட்டைகளில் சில பட்டை அகற்றப்பட்டிருந்தும், சில பட்டைகள் அகற்றப்படாமலும் இருந்தது. அந்த கட்டைகளின் அளவுகள் வெவ்வேறு அளவுகளில் இருந்தன. அதிகப்படியாக 3 அல்லது 4 அடி நீளம் இருந்தது. செம்மரக்கட்டைகளின் பட்டைகளை அகற்ற ஆயுதங்கள் பயன்படுத்தவேண்டும் என்றால் இயற்கையாகவே முதிர்ச்சியான மரங்களில் இருந்து பட்டைகள் உரிந்துவிடும். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட மரத்துண்டுகளில் ஆயுதங்களை பயன்படுத்தி பட்டைகள் எதுவும் நீக்கப்படவில்லை. ஆனால் மரத்துண்டுகள் அனைத்தும் ஆயுதங்கள் பயன்படுத்தி வெட்டப்பட்ட மரத்துண்டுகள் என்றால் சரிதான். பிடிபட்ட எதிரிகளையும் பிடிபொருட்களையும் காப்புக்காட்டில் உள்ள செட்டிற்கு கொண்டு சென்றோம். அங்கு தாராசு இருந்தது. இயற்கையாக விழும் மரங்களை எடைப்போட அங்கு தராசு இருக்கும். அந்த செட் திறந்திருந்ததா அல்லது கதவு அடைக்கப்பட்டிருந்ததா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. நான் அங்கு செல்லவில்லை என்றாலும் அதனால்தான் எனக்கு நியாபகம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்னதுபோல் செட்டில் வைத்து மரத்துண்டுகளை எடைப்போடவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மற்றும் மரத்துண்டுகளை கைப்பற்றியதை தவிர மற்ற விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி யாரை விசாரணை செய்தார் என்ன ஆவணங்கள் தயார் செய்தார் என்று எனக்கு தெரியாது. நான் சொன்னதுபோல் எனக்கு எந்த வாய்மொழி உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்றும், நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், அவர்களிடம் இருந்து செம்மரக்கட்டைகளை கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட

கட்டைகள் எங்கிருந்து கொண்டுவரப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. மொரப்பூர் வனச்சரக அலுவலர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**